ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**<u>கடித எண். 17401 /மா.அ.தி.1/2009–1, நாள். 7. 09. 2009.</u>**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
பனகல் மாளிகை,
சென்னை–15.

அய்யா,

பொருள் : நமக்கு நாமே திட்டம் – 2009–10ம் ஆண்டு நமக்கு நாமே திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பணிகளை மேற்கொள்வது குறித்த தெளிவுரை – வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அரசு ஆணை (நிலை) எண். 62, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (மா.அ.தி.1) துறை, நாள் 16.7.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண். 68932/08/NEDM-2, நாள் 27.7.2009.

*****

பார்வை 2ல் காணும் தங்கள் கடிதம் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. அக்கடிதத்தில் நாமக்கல் மாவட்டம் எலச்சிப்பாளையம் வட்டாம் கொன்னையார் ஊராட்சி அணைப்பாளையம் தங்கவிலாஸ் திரவிய சகாய பாடசாலை துவக்கப்பள்ளிக்கு நமக்கு நாமே திட்டம் 2009–10–ன் கீழ் ரூ.3,30,000/– மதிப்பீட்டில் (பொதுமக்கள் பங்களிப்பு ரூ.1,10,000/–) சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக சிறப்பு அனுமதி கோரப்பட்டிருந்தது. மேற்படி பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி அத்தியாவசியம் என்பதாலும் மாணவர்களின் பாதுகாப்பிற்கு முக்கியமானது என்பதாலும் சிறப்பு அனுமதி கோரிய தங்களின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது.

2. அரசாணை (நிலை) எண். 62, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 16.7.2009ல் நமக்கு நாமே திட்டத்தினை 2009–10ம் ஆண்டில் செயல்படுத்துவது குறித்து வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் இன்னபிறவற்றுடன் அரசு,

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் அரசு கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டிடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்/சுற்றுவேலி அமைத்தல் பணிகளை எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனினும், 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்யலாம் என அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பள்ளிகளில் சுற்றுச்சுவர்/சுற்றுவேலி அமைப்பது தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இல்லாத நிலையில் அரசு, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசு கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு சுற்றுச்சுவர்/சுற்றுவேலி அமைக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், இப்பணிகளை 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக்கல்வி பள்ளிகளிலும் எடுத்துச் செய்யலாம் என்ற தெளிவுரை வழங்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக